**OS No.6/2021**

PW 2 - முருகன்

நாள் 29.04.2026

**வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவா சொத்து சம்பந்தமாக இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் திருப்பதி தான் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அர்ஜுனனும் நானும் அண்ணியேந்தல் கிராமத்தில் ஒரே தெருவில் அருகருகே குடியிருந்து வருகிறோம். அர்ஜுனன் எனக்கு பெரியப்பா உறவுமுறை ஆவார்.

எனக்கு விவசாயத் தொழில் ஆகும். அர்ஜுனனுக்கும் அண்ணியேந்தல் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார். துத்திகுளம் கிராமத்தில் உங்களுக்கு சொத்து உண்டா என்றால் இல்லை.

அர்ஜுனன் தற்சமயம் திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அர்ஜுனக்குப் பாத்தியப்பட்ட அண்ணியேந்தல் கிராமத்தில் உள்ள சொத்துக்களில் நான் தான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

தாவா சொத்து அர்ஜுனனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்கக்கூடிய என்ன ஆவணத்தை பார்த்துள்ளீர்கள் என்றால் வருவாய்த்துறை ஆவணத்தைப் பார்த்துள்ளேன். வருவாய்துறை ஆவணம்என்பது FMB ஆவணத்தைப் பார்த்துள்ளேன்.

வழக்கு சொத்து அர்ஜுனனின் தகப்பனாருக்கு கிரயப்பாத்தியப்பட்டதா என்ற விபரம் எனக்குத் தெரியாது. வழக்கு சொத்திற்கு வடக்கே யார் உள்ளார் என்றால் கால்வாய் உள்ளது. தற்சமயம் நான்குமால் விபரம் எனக்குத் தெரியாது.

வழக்கு சொத்தைப் பற்றிய எந்த விபரமும் எனக்குத் தெரியாது என்றும் அர்ஜுனன் உங்களுக்கு பெரியப்பா உறவுமுறை என்பதால்

அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. திருப்பதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தைத் தான் வேலி அமைத்து அனுபவம் செய்துவருகிறார் என்றும் அவர் யாருடைய சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள படி திருப்பதி எந்த சொத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**– Sd –**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**– Sd –**
**District Munsif,**
**Manamadurai.**